சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.81/2022</u>

23.09.2025

வா.சா.2 திரு. சுரேஷ்குமார், த/பெ. சுப்பையன்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் வாதிக்கு வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வாகனத்திற்கு ஓட்டுநர் பணியை மட்டும் செய்துவருகிறேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் இன்ஜின் செயல்பாடுகள், எரிபொருள் உபயோகம் குறித்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் எனக்குண்டான மெக்கானிக் மட்டுமே தெரியும் என்றாலும் சரிதான். டீசல் பம்ப் சர்வீஸ் செய்யும் போது ஒவ்வொரு முறையும் அதன் செயல்திறன் மாறும் என்றால் சரிதான். வாகனத்தை மன்னார்குடி வழியாக இயக்க வேண்டும் என்ற குறிப்பு எனது வாகன உரிமையாளரிடம் இருக்கும் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் ஒரு முறை சென்று வந்தால் 55 லி முதல் 58 லி வரை டீசல் பிடிப்பேன் என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. டீசல் அழுத்த திறன் பொறுத்து என்னால் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. வாகனத்தில் எரிபொருள் ஒரே சமயத்தில் 168 லிட்டர் பிடிக்கும் அளவிற்கு டேங்க் உள்ளது. அந்த டேங்கை பூட்டி சாவியை வாதியின் அலுவலகத்தில் வைத்துக்கொள்வார்கள் என்றால் சரிதான். அந்த பூட்டை உடைக்காமல் டீசலை எடுக்கமுடியாது என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் என்ற முறையில் மாதாந்திர சம்பளம் உண்டு என்றால் சரிதான். அதை தவிர ஒவ்வொரு நாள் சென்று வரும் போதும் பயணப்படி கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஒருவேளை என்னால் வாகனத்தில் செல்ல இயலாத நிலை ஏற்பட்டால் எனக்கு குறைந்த பட்ச ஊதியம் கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.